முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

**Provincial Department of Education - NWP**

**தரம் 11**

# மூன்றாம் தவணைப் பரீட்சை 2022 (2023)

## விவசாயமும் உணவுத்தொழில்நுட்பமும்

நேரம் :- 3 மணி.

சுட்டெண்: ..............................

மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடங்கள்

பகுதி – I

**கவனிக்க**

- **எல்லா வினாக்ககுக்கும் விடை எழுதுக.**
  **இலக்கம் 01- 40 வரையிலான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள 1,2,3,4 எனும் விடைகளுள் மிகச் சரியான விடையினைத் தெரிவு செய்க.**
- **உங்களுக்குத் தரப்பட்ட விடைத்தாளில் சரியான விடையினைக் குறிக்கும் இலக்கம் உடைய வட்டத்திற்குள் (X) இடையாளமிடுக.**
- **மிகச்சரியான விடையினைத் தெரிவு செய்க.**

01) மின்னேரியாவின் தெய்வம் என அழைக்கப்பட்ட மன்னன்

1) மகாசேனன் 2) தாதுசேனன் 3) பராக்கிரமபாகு 4) வசபன்

02) தாவர ஒட்டுதல் வெற்றியளிப்பதற்கு ஒட்டுக்கட்டை ஒட்டுமுளை ஆகியவற்றிலுள்ள எந்த இழையங்கள் நன்றாகத் தொடுகையுற வேண்டும்

1) காழ் 2) உரியம் 3) மாறிழையம் 4) மேற்பட்டை

03) குளத்தில் மேலதிக நீரை வெளியேற்றுவதற்காக காணப்படும் பிரதான பகுதி

1) அணைக்கட்டு
2) கால்வாய்
3) சுருங்கை
4) கலிங்கல்தொட்டி

04) வளிமண்டல சாரீரப்பதனானது பயிர்ச்செய்கையை பாதிக்கும் காலநிலை பரமாணங்களுல் ஒன்றாகும் ஈரப்பதன் அதிகரிப்புடன்

1) தாவரநோய்கள் அதிகரிக்கும்
2) வெட்டுத்தண்டுத் துண்டங்களின் வேருருவாதல் அடைக்கப்படும்
3) வித்துக்களின் சேமிப்புக் காலம் அதிகரிக்கும்
4) பூச்சிப் பீடைத் தாக்கம் குறைவடையும்

05) காலநிலை பரமாணங்கள் தொடர்பான சில கூற்றுக்கள் வருமாறு

A- சாரீரப்பதன் சதவீதத்தில் குறித்துக் காட்டப்படும்
B- காற்றின் வேகம் மணிக்கு கிலோமீற்றரில் அளவிடப்படும்
C- ஒளிச்செறிவு லக்ஸ் எனும் அலகில் குறிப்பிடப்படும்

இவற்றுல் சரியான கூற்றுக்கள்

1) A,B ஆகியன் மாத்திரம்
2) A,C ஆகியன் மாத்திரம்
3) B,C ஆகியன் மாத்திரம்
4) A,BC ஆகிய எல்லாம்

06) ஔிச்செறிவு அளவிடப்படும் அலகு
1) செல்சியஸ்
2) லக்ஸ்
3) மணித்தியாலத்திற்கு கிலோமீற்றர்
4) மில்லிமீற்றர்

07) மண் பக்கப்பார்வையை கருதும் போது மண் மேற்பரப்பில் காணப்படும் படை
1) R படை
2) C படை
3) A படை
4) B படை

08) மண் கூறுகளைக் கருதும் போது அதிக சதவீதத்தில் காணப்படும் கூறு
1) மண்நீர்
2) மண்வளி
3) மண் கனிப்பொருள்
4) மண் சேதனப்பொருள்

09) செங்கபில நிறமானதும் பளிங்காகக் காணப்படுவதும் நீரில் நன்கு கரையக்கூடியதுமான இரசாயனப் பசளை
1) மியூரியேற்று பொட்டாசு
2) யூரியா
3) பாறைப்பொசுபேற்று
4) மும்மை சுப்பர் பொசுபேற்று

10) பின்வரும் பயிர்களில் அவரைக் குடும்பத்தில் அடங்காத பயிர்
1) பயற்றை
2) கங்குன்
3) உழுந்து
4) கடலை

11) பயிர்ச் செய்கையில் தயார் படுத்தப்படும் பாத்தி வகைகளில் தென்னைப் பயிருக்குப் பயன்படுத்தப்படும் பாத்தி வகை
1) உயர் பாத்தி
2) தாழ் பாத்தி
3) தனிநடுகைக் குழி
4) வரம்புசால் பாத்தி

12) நடுகைப் பொருட்களை பயிர் நிலத்தில் தாபிப்பது அழைக்கப்படுவது
1) பயிர் தாபித்தல்
2) பயிர் வகைப்படுத்தல்
3) வித்து முளைத்தல்
4) வித்து உறங்கு நிலை

13) பின்வரும் முறைகளில் நாற்று மேடையை தொற்று நீக்குவதற்குப் பயன்படுத்தப்படாத முறை
1) சூரிய வெப்பத்தைப் பயன்படுத்தல்
2) எரித்தல்
3) கொதிநீர் இடுதல்
4) மண்ணுக்கு சுண்ணாம்பு இடுதல்

14) உயர் பாத்தி தயாரிக்கும் போது பாத்தியின் உயரம் அண்ணளவாக எவ்வளவாக இருத்தல் வேண்டும்

1) 100 CM
2) 15 CM
3) 25 CM
4) 50 CM

15) பின்வருவனவற்றுல் பயிர்ச்செய்கையில் நீர் முகாமைத்துவ உபாயமாக அமையாதது

1) நீர் வடிப்பு
2) நீர் அகத்துரிஞ்சல்
3) மண்ணீர் காப்பு
4) நீர்ப்பாசனம்

16) பின்வருவனவற்றுல் மண்ணிலிருந்து நீர் வெளியேற்றப்படும் முறையாக அமையாதது

1) மழைவீழ்ச்சி
2) ஆவியுயீர்ப்பு
3) ஆவியாதல்
4) ஊடுவடிதல்

17) பின்வரும் களைகளில் ஆக்கிரமிப்புக் களையாக அமைவது

1) சீதேவியர் செங்கழுநீர்
2) கீழ்காய்நெல்லி
3) மும்மூட்டுக் கோறை
4) இராட்சத தொட்டால் சுருங்கி

18) வாழைக் கொத்துமுனை நோய் எந்த நோய்க்காரணியால் ஏற்படுகின்றது

1) பற்றீரியா
2) வைரஸ்
3) வட்டப்புழு
4) பைற்றோபிளாஸ்மா

19) பின்வரும் நெற்பேதங்களில் பாரம்பரியமான நெற்பேதமாக அமையாதது

1) $H_4$
2) சுவந்தல்
3) மடதவாலு
4) குருளுதுடு

20) நெற்பயிரின் முதிர்ச்சிக் காலம் எவ்வளவு

1) 45 நாட்கள்
2) 60 நாட்கள்
3) 75 நாட்கள்
4) 30 நாட்கள்

21) வித்துறையின் மீது நிரோதிப்பதார்த்தங்கள் காணப்படுவதன் காரணமாக முளைத்தல் தாமதமாகும் வித்து

1) மா
2) புளி
3) பப்பாசி
4) சோளம்

22) பின்வரும் காரணிகளில் வித்து முளைத்தலுக்கு அத்தியவசியமான காரணிகள்
   1) காபனீரொக்சைட் மற்றும் ஒட்சிசன்
   2) காபனீரொக்சைட் மற்றும் நீர்
   3) ஒட்சிசன் மற்றும் நீர்
   4) நீர் மற்றும் சூரியஒளி

23) பின்வருவனவற்றுல் வேர் துண்டங்கள் மூலம் இனப்பெருக்கப்படும் பயிர்கள்
   1) வத்தாளை மற்றும் மரவெள்ளி
   2) பொன்னாங்கனி மற்றும் கங்குன்
   3) அந்தூரியம் மற்றும் பெகோனியா
   4) கருவேப்பிலை மற்றும் ஈரப்பலா

24) பெகோனியா பெப்பரோமியா சன்சிவேரியா ஆகிய அலங்கார இலைத்தாவரங்களை இனப்பெருக்க உகந்த மிகப்பொருத்தமான முறை
   1) தண்டுத் துண்டங்களை நாட்டுதல்
   2) வேர்த துண்டங்களை நாட்டுதல்
   3) இலைத்துண்டங்களை நாட்டுதல்
   4) பதிவைத்தலை மேற்கொள்ளுதல்

25) பின்வருவனவற்றுல் மண்ணின்றிய பயிர்ச்செய்கையில் பயன்படுத்தப்படுத்துவதற்கு மிகவும் பொருத்தமான போசனை ஊடகம்
   1) அல்பேர்ட் கரைசல்
   2) ஏகார்
   3) மண்புழு திரவப்பசளை
   4) போடோக்கரைசல்

26) வளிமண்டல நிலைமைகளுடன் ஒப்பிடுகையில் எளிய சூரிய இனப்பெருக்கியினுள்
   1) வெப்பநிலை ஒளி ஆகியன குறைவாகும்
   2) சாரீரப்பதன் வெப்பநிலை ஆகியன அதிகமாகும்
   3) சாரீரப்பதன் குறைவாக இருப்பதுடன் வெப்பநிலை அதிகமாகும்
   4) சாரீரப்பதன் அதிகமாக இருப்பதுடன் வெப்பநிலை குறைவாகும்

27) பண்ணையொன்றில் ஒரு உற்பத்தி அலகின் பக்கவிளைபொருள்கள் மற்றைய உற்பத்தி அலகுகளின் மூலப்பொருட்களாகப் பயன்படுத்தப்பட்டு ஒரே நிலத்தில் பயிரச்செய்கை விலங்குவளர்ப்பு சக்திவலு உற்பத்தி ஆகிய செயன்முறைகளை இணைத்து மேற்கொள்ளப்படுவது
   1) சேனைப்பயிர்ச் செய்கை
   2) காப்பு விவசாயம்
   3) சேதன விவசாயம்
   4) ஒன்றினைந்த விவசாயம்

28) அறுவடைக்குப் பிந்திய தொழினுட்பத்தின் பிரதான குறிக்கோள்
   1) அறுவடைக்கு இயந்திரங்களைப் பயன்படுத்துதல்
   2) அறுவடைக்குப் பிந்திய காரணிகளை முகாமைசெய்து விளைச்சல் இழப்பினைக் குறைத்தல்
   3) விளைச்சளைக் கொண்டு செல்வதெற்கென பிளாத்திக்கு பெட்டிகளைப் பயன்படுத்தல்
   4) விளைச்சளைக் களஞ்சியப்படுத்தவதற்கு குளிர் சேமிப்பு அறைகளைப் பயன்படுத்துதல்

29) தக்காளி கொடிதோடை பப்பாசி ஆகிய பழங்கள் பழுக்கும் போது அவற்றின் வித்தைச் சூழ்ந்து சளித்தன்மையான மென்படலமொன்று காணப்படும் இம் மென்படலம் மூலம் நடைபெறுவது குறித்த வித்து
1) காய்களினுள்ளே முளைப்பது தடுக்கப்படும்
2) பூச்சித் தொல்லைகளில் இருந்து பாதுகாக்கப்படும்
3) காயினுள் ஒட்டியிருக்க உதவும்
4) பறவைகளின் சொன்டில் ஒட்டிக்கொண்டு பரவ உதவும்

30) பாடசாலை சுகாதார மருத்தவ பரிசோதனையில் சில மாணவர்களின் கண் பார்வை நலிவடைந்திருப்பதாகவும் அவர்கள் இராக்குருட்டினால் பீடிக்கப்பட்டிருப்பதாகவும் தோல் அழுத்தமற்றிருப்பதாகவும் காணப்பட்டது இந்நிலைமைக்கு ஒரு பரிகாரமாக கூடுதலாக உட்கொள்ள வேண்டிய உணவுப்பொருள்
1) கௌப்பி கடலை பருப்பு சோயாஅவரை
2) வல்லாரை பொன்னாங்கனி கரட் சாறனை முட்டைமஞ்சட்கரு
3) சோறு மீன் பால் பீர்க்கு முட்டை
4) வத்தாளை உருளைக்கிழங்கு பீற் முள்ளங்கி நோக்கோல்

31) தாவர இனப்பெருக்கத்தின் போது எளிய சூரிய இனப்பெருக்கி பெரும்பாலும் பயன்படுத்தப்படுவதன் பிரதான நோக்கம்
1) நாற்றுக்களை வண்மைப்படுத்துவதற்கு
2) வித்துக்களை இலகுவாக முளைக்கச் செய்வதற்கு
3) நாற்றுக்களுக்கு பின்கண்காணிப்பு மேற்கொள்வதற்கு
4) தண்டுத் துண்டங்களின் வேர் விடுதலை விரைவுபடுத்துவதற்கு

32) மாட்டுணவாக பிண்ணாக்கு பசும்புல் உலர்புல் குழிகாப்புத்தின் அரிசித்தவிடு ஆகியன வழங்கப்படுவதாக பண்ணையாளர் ஒருவர் கூறினார் இவற்றில் செறிவுணவு வகைகள்
1) பிண்ணாக்கும் அரிசித்தவிடும்
2) பசும்புல்லும் உலர் புல்லும்
3) குழிகாப்புத்தீனும் பிண்ணாக்கும்
4) அரிசித்தவிடும் உலர்புல்லும்

33) உடைக்கப்பட்ட விலாங்காயின் உள்ளீடு சில மணித்தியாலங்களின் பின் கபிலநிறமாகிக் காணப்பட்டது இங்கு நடைபெற்றிருப்பது
1) நொதியக் கபிலநிறமாதலாகும்
2) நொதியமற்ற கபிலநிறமாதலாகும்
3) நுண்ணங்கித் தாக்கமாகும்
4) உலர்த்தியதனாலாகும்

34) மண்ணில் புதைக்கப்பட்ட நுன்துளை கொண்ட மட்குடத்தைப் பயன்படுத்தி பின்வரும் எப்பயிருக்கு வெற்றிகரமாக நீர்ப்பாசனம் செய்யலாம்
1) குரக்கன்
2) மிளகாய்
3) மிளகு
4) சலாது

35) கோழிக் குஞ்சுகளை குஞ்சுவதியில் பராமரிப்பதன் பிரதான நோக்கம்
1) நோய்கள் தொற்றுவதைத் தவிர்த்தலாகும்
2) ஒட்டுண்ணிகளில் இருந்து குஞ்சுகளைப் பாதகாத்தலாகும்
3) சூழல் வெப்பநிலைக்கு பழக்கப்படும் வரை குஞ்சுகளைப் பாதுகாத்தலாகும்
4) பொருத்தமற்ற குஞ்ககளை நீக்குவதை இலகுபடுத்தலாகும்

36) கோழிகளுக்கு ஏற்படும் கொச்சிடியோசிசு நோய்க்குரிய நோய் காரணி
1) புரற்றசோவா
2) பற்றிரீயா
3) பங்கஸ்
4) வைரஸ்

37) கோழிப் பண்ணையொன்றில் கோழிகள் கூட்டமாகவும் சோர்வுடனும் இருத்தல் வெண்ணிறக்கழிச்சல் காணப்படுதல் கழியலறையைச் சுற்றிவர வெண்ணிறப்படிவுகள் காணப்படுதல் போன்ற இயல்புகள் காணப்பட்டன அக்கோழிகளுக்கு ஏற்பட்டுள்ள நோய்
1) கொக்சிடியோசிஸ்
2) புள்ளோரம்
3) ரனிகட்
4) நெமற்றோடு நோய்

38) உணவுப்பொதியொன்றில் அருகில் தரப்பட்டுள்ள சின்னம் பச்சை நிறத்தில் அச்சிடப்பட்டிருந்தால் அது குறிப்பது அந்த உணவு



1) பரம்பரையலகு விகாரத்திற்கு உட்படுத்தப்பட்டது
2) கதிர் வீச்சக்கு உட்படுத்தப்பட்டது
3) சர்வதேச தரத்தை உடையது
4) தொற்று நீக்கப்பட்டது

39) கண்ணாடி மேற்பரப்பின் மீது பால் மாதிரியில் ஒரு துளியை இட்டபோது அது வெண்ணிற ஓரங்கள் கொண்ட அடையாளத்தை ஏற்படுத்தாது பாய்ந்து சென்றது இதிலிருந்து மேற்கொள்ளத்தக்க முடிவு பாலில்
1) நுண்ணங்கித் தொற்று ஏற்பட்டுள்ளது
2) நீர் கலக்கப்பட்டுள்ளது
3) நிறப்பொருள் சேர்க்கப்பட்டுள்ளது
4) தேங்காய் எண்ணெய் சேர்க்கப்பட்டுள்ளது

40) பின்வருவனவற்றில் உணவு உற்பத்திப் பொருளொன்றின் சர்வதேச மட்டத் தரத்தினை வகைக்குறிக்கும் சுருக்கம் யாது
1) SLS
2) IPNS
3) ISO
4) GAP

**Agriculture 11 Part II**

முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
**Provincial Department of Education - NWP**

**தரம் 11**

**மூன்றாம் தவணைப் பரீட்சை 2022 (2023)**

சுட்டெண்: ...............................

**விவசாயமும் உணவுத்தொழில்நுட்பமும்**

**பகுதி 11**

**முதலாம் வினா உட்பட மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக**

01) அனுராதபுர நகரத்தில் வாழும் விவசாயி ஒருவர் தனது பண்ணையில் பயிர்ச்செய்கை கால்நடை வளர்ப்பு உயிர்வாயு உற்பத்தி என்பவற்றை மேற்கொள்வதற்கு திட்டமிட்டுள்ளார்

i) மேலுள்ளவாறு பண்ணையைத் திட்டமிடுவது எப்பயிர்ச் செய்கை முறையைக் குறிக்கும் (புள்-2)

ii) இப்பயிர்ச்செய்கை முறையின் இரண்டு அனுகூலங்களைக் குறிப்பிடுக (புள்-2)

iii) இப்பயிர்ச்செய்கை முறையின் இரண்டு தீமைகளைக் குறிப்பிடுக (புள்-2)

iv) அனுராதபுரம் உள்ளடக்கப்படும் காலநிலை வலயத்தைக் குறிப்பிடுக (புள்-2)

v) இக்காலநிலை வலயத்திற்கு கிடைக்கும் பிரதான மழைவீழ்ச்சி வகையையும் அம்மழை கிடைக்கும் காலப்பகுதியையும் குறிப்பிடுக (புள்-2)

vi) பண்ணையில் கூட்டெரு தயாரிப்பதற்கு விவசாயி பெற்றுக் கொள்ளக்கூடிய மூலப்பொருட்கள் இரண்டு குறிப்பிடுக (புள்-2)

vii) கூட்டெரு உற்பத்தி செய்வதற்குப் பொருத்தமான இடத்தை தெரிவு செய்யும் போது கவணிக்க வேண்டிய விடயங்கள் இரண்டு குறிப்பிடுக (புள்-2)

viii) இவ்விவசாயி பசுந்தாட் பசளையாகப் பயன்படுத்தக் கூடிய தாவரங்கள் நான்கு குறிப்பிடுக (புள்-2)

ix) இவ்விவசாயி பால் உற்பத்திக்காக வளர்க்கக் கூடிய இரண்டு வகையான பசு வர்க்கங்களைக் குறிப்பிடுக (புள்-2)

x) மாடுகள் வளர்க்கப்படும் பிரதான மூன்று முறைகளையும் குறிப்பிடுக (புள்-2)

02) இனத்தைப் பெருக்குவதற்கென இயல்பாகவே தாவரங்கள் கொண்டுள்ள ஆற்றலைப் பயன்படுத்தி பயிர்செய்கைக்குத் தேவையான நடுகைப்பொருட்களை உற்பத்தி செய்தல் தாவர இனப்பெருக்கம் எனப்படும்

i) a) பிரதான தாவர இனப்பெருக்க முறைகள் இரண்டையும் குறிப்பிடுக (புள்-2)

b) மேலுள்ள இனப்பெருக்க முறைகளில் வித்துக்கள் மூலம் நடைபெறும் இனப்பெருக்க முறையைப் பெயரிடுக (புள்-1)

ii) a) வித்து முளைத்தல் என்றால் என்ன (புள்-1)

b) வித்து முளைத்தலுக்குத் தேவையான இரண்டு காரணிகளைக் குறிப்பிடுக (புள்-2)

c) நடுவதற்கப் பொருத்தமான வித்துக்களில் இருக்கவேண்டிய இரண்டு இயல்புகளைக் குறிப்பிடுக (புள்-2)

iii) ஒட்டுவதற்காகப் பயன்டுத்தக்கூடிய பிரதான உபகரணங்கள் இரண்டு குறிப்பிடுக (புள்-2)

03) பயிர்செய் நிலத்தில் நாட்டிய வித்துக்கள் அல்லது நாற்றுக்கள் மண்ணில் நன்கு தாபிக்கப்படவும் அதன் பின் சிறப்பான வளர்ச்சிக்கும் பொருத்தமான மண் சூழலை உருவாக்கும் வகையில் மண்ணை பௌதீக ரீதியாக தயார் செய்தல் நிலம் பண்படுத்தல் எனப்படும்

i) a) நிலப்பண்படுத்தலின் பிரதான நோக்கங்கள் 4 குறிப்பிடுக (புள்-2)

b) நிலப்பண்படுத்தலின் பிரதான படிமுறைகள் இரண்டையும் குறிப்பிடுக (புள்-2)

ii) a) பயிர்ச்செய்கையின் போது பயன்படுத்தப்படும் 4 பாத்தி வகைகளைக் குறிப்பிடுக (புள்-2)

b) தென்னைப்பயிருக்கு பொருத்தமான பாத்தி வகையைப் பெயரிடுக (புள்-1)

iii) a) நீங்கள் அறிந்த முதற்பண்படுத்தல் உபகரணங்கள் இரண்டு குறிப்பிடுக (புள்-2)

b) இடைப்பண்படுத்தல் என்றால் என்ன (புள்-1)

04) நடுகைப்பொருட்களை நாட்டி அவை முளைத்து நன்றாக வளர உகந்த சூழலைவழங்கி நிரந்தர வயலில் நாட்டுவதற்குப் பொருத்தமான நிலைமை ஏற்படும் வரை தற்காலிகமாகப் பராமரிக்கும் இடம் நாற்று மேடை எனப்படும்

i) a) நாற்றுமேடையின் முக்கியத்துவங்கள் 4 குறிப்பிடுக (புள்-2)

b) நாற்றுமேடைக்குப் பொருத்தமான இடத்தை தெரிவு செய்யும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் 2 குறிப்பிடுக (புள்-2)

ii) a) சாடி நாற்று மேடை எவ்வாறு தயார்படுத்தப்படும் (புள்-1)

b) சாடி நாற்றுமேடைக்கு சாடிகளாகப் பயன்படுத்தக் கூடிய பொருட்கள் 4 குறிப்பிடுக (புள்-2)

c) நாற்றுத் தட்டுக்கள் எவ்வாறான பயிர்களுக்குப் பயன்படுத்தப்படும் (புள்-1)

iii) a) நாற்றுமேடை தொற்று நீக்கல் என்றால் என்ன (புள்-1)

b) நாற்றுமேடை தொற்றுநீக்கல் முறைகள் 2 குறிப்பிடுக (புள்-1)

05) நீர்வளம் மட்டுப்படுத்தப்பட்டதாகவுள்ளதால் அதை எதிர்கால சந்ததியினருக்கும் பயன்படுத்தத்தக்கவாறு முகாமை செய்ய வேண்டும்

i) a) பயிர்ச்செய்கையில் நீரின் முக்கியத்துவங்கள் 4 குறிப்பிடுக (புள்-2)

b) பயிர்ச்செய்கையில் நீர் முகாமைத்துவ உபாயங்கள் 3 குறிப்பிடுக (புள்-2)

ii) a) மண்ணீர் பாதுகாப்பு முறைகள் 2 குறிப்பிடுக (புள்-2)

b) நீங்கள் அறிந்த இயற்கை மூடுபடைகள் 2 குறிப்பிடுக (புள்-2)

iii) நீர்ப்பாசன முறையைத் தீர்மானிக்கும் போது கவனிக்க வேண்டிய அம்சங்கள் 2 குறிப்பிடுக (புள்-2)

06) பயிர்களின் வளர்ச்சி விளைச்சலின் அளவு விளைச்சலின் தரம் ஆகியன சிறப்பாக அமையும் வகையில் இயற்கை சூழலை மாற்றியமைத்து அதன்கீழ் பயிர்செய்தல் ஆழுகைநிபந்தனையின் கீழான பயிரச்செய்கை எனப்படும்

i) a) ஆழுகைநிபந்தனையின் கீழான பயிர்ச்செய்கையின் முக்கியத்துவங்கள் 4 குறிப்டுபிக (புள்-2)

b) ஆழுகை இல்ல பயிர்ச்செய்கையின் கீழ் பாதகமான காலநிலை நிலைமைகளில் இருந்து பயிர்களைப் பாதகாப்பதற்கு பயன்படுத்தப்படும் கட்டமைப்பு எப்பெயர் கொண்டு அழைக்கப்படும் (புள்-1)

ii) a) நீங்கள் அறிந்த தற்காலிக ஆழுகைக் கட்டமைப்புக்கள் 2 குறிப்பிடுக (புள்-2)

b) பயிர்ச்செய்கையின் போது பயன்படுத்தப்படும் நிரந்தர பயிர்சசெய்கை கட்டமைப்புக்கள் 4 குறிப்பிடுக (புள்-2)

iii) a) பொலித்தின் இல்லங்களைப் பயன்படுத்துவதன் தீமை ஒன்றினைக் குறிப்பிடுக (புள்-1)

b) மண்ணின்றிய பயிர்ச்செய்கையின் பிரதிகூலங்கள் 2 குறிப்பிடுக (புள்-2)

07) மனித போசனையில் மனிதனுக்கு தேவையான புரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு விலங்குவளப்பு மிகவும் முக்கியமானதாகும்

i) a) கனகூளமுறை மூலம் கோழிகளை வளர்ப்பதனால் கிடைக்கும் 4 அனுகூலங்களைக் குறிப்பிடுக (புள்-2)

b) ஒரு நாள் வயது புரோயிலர் கோழிக் குஞ்சுகளை கொள்வனவு செய்யும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் 4 குறிப்பிடுக (புள்-2)

c) கோழி வளர்ப்பில் கனகூளமாகப் பயன்படுத்தக் கூடிய பதார்த்தங்கள் 2 குறிப்பிடுக (புள்-1)

ii) a) பசுவில் வெளிக்காட்டப்படும் வேட்கை அறிகுறிகள் 4 குறிப்பிடுக (புள்-2)

b) பசுவின் வற்றுக்காலம் என்பதனை வரைவிலக்கணப்படுத்துக (புள்-1)

iii) a) மாடுகளுக்கு ஏற்படும் பால் காய்ச்சல் நோயின் நோய்க்காரணியைக் குறிப்பிட்டு இந்நோயின் நோய் அறிகுறி ஒன்றினைக் குறிப்பிடுக (புள்-2)

b) இலங்கையில் காணப்படும் விலங்கு வளர்ப்பு வலயங்கள் 2 குறிப்பிடுக (புள்-2)

# வடமேல் மாகணக் கல்வித் திணைக்களம்
## மூன்றாம் தவணைப் பரீட்சை- 2022
## விவசாயமும் உணவுத் தொழில்நுட்பமும்
## தரம் - 11
## விடைப்பத்திரம்

## பகுதி – I

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | 11 | 3 | 21 | 3 | 31 | 4 |
| 2 | 3 | 12 | 1 | 22 | 3/4 | 32 | 1 |
| 3 | 3 | 13 | 4 | 23 | 4 | 33 | 1 |
| 4 | 1 | 14 | 2 | 24 | 3 | 34 | 3 |
| 5 | 4 | 15 | 2 | 25 | 1 | 35 | 3 |
| 6 | 2 | 16 | 1 | 26 | 2 | 36 | 1 |
| 7 | 3 | 17 | 4 | 27 | 4 | 37 | 2 |
| 8 | 3 | 18 | 2 | 28 | 2 | 38 | 2 |
| 9 | 1 | 19 | 1 | 29 | 1 | 39 | 2 |
| 10 | 2 | 20 | 4 | 30 | 2 | 40 | 3 |

## பகுதி 11

01)

i) ஒன்றிணைந்த பயிர்ச்செய்கை

ii) வளங்களில் இருந்து உச்ச பயனைப் பெறலாம்/மண்ணின் பௌதீக இரசாயன இயல்புகள் விருத்தியடையும்/சமநிலை உணவைப் பெறலாம்/உற்பத்திச் செலவ குறைவு/வருடம் பூராவும் வருமானம் கிடைக்கும்/சூழல்மாசடையாது/ஐயப்பாடு குறைவு

iii) சிறிய நிலப்பரப்பில் பயன்படுத்த முடியாது/செலவு அதிகம்/தொழினுட்ப அறிவு தேவை

iv) உலர் வலயம்

v) வடகீழ் பருவபெயர்ச்சி டிசம்பர் -- பெப்ரவரி

vi) அவரைத் தாவரங்கள் (தாவர மீதிகள் )/விலங்குக் கழிவுகள் (மாட்டெரு கோழியெரு) / பாறைப்பொசுபேற்று/கறுப்புநிறப் பொலித்தின் /நீர்

vii) போக்குவரத்து வசதி/நீர்வசதி/நீரில் மூழ்காத இடம்/வீடுகள் கிணறுகள் பக்கத்தில் இல்லாதிருத்தல்/மூலப்பொருட்களைப் பெறக் கூடிய இடம்

viii) கிளிரிசிடியா/சல்வினியா/பூவரசு/காவிளாய்/இபில் இபில்/முள்முருங்கை/கிலுகிலுப்பை

ix) சகிவால்/சிந்தி/உள்ளூர் இனங்கள்

x) திறந்தவெளி வளர்ப்பு/தீவிரமுறை வளர்ப்பு/அரைத்தீவிர முறை வளர்ப்பு

02)

i) a) இலிங்கமுறை இனப்பெருக்கம்/இலிங்கமில்முறை இனப்பெருக்கம் (பதியமுறை)
   b) இலிங்கமுறை இனப்பெருக்கம்

ii) a) வித்தில் காணப்படும் முளையம் புதிய தாவரமாக வளரத் தொடங்குதல்
   b) நீர்/வெப்பநிலை/ஒட்சிசன்/சூரியஒளி
   c) இனத்தூய்மை/பௌதீகத் தூய்மை/களைவித்துக்கள் இல்லாதிருத்தல்/பதர்கள் இல்லாதிருத்தல்/அதிக முளைதிறன் காணப்படுதல்

iii) ஒட்டுக்கத்தி/செகட்டியர்

3)

i) a) மண்ணின் பௌதிக இயல்புகள் மேம்படும்/வேர்கள் நன்கு ஊடுருவி வளரும்/பயிர்களுக்கு பொருத்தமானவாறு நிலத்தை தயார் செய்தல்/மண்ணின் கற்கள் முற்களை அகற்றுதல்/மண்ணுடன் பசளை கலத்தல்/பீடைகளைக் கட்டுப்படுத்தல்

b) ஆரம்பப்பண்படுத்தல்/இடைப்பண்படுத்தல்

ii) a) உயர்பாத்தி/தாழ்பாத்தி/வரம்புசால் பாத்தி/தனிநடுகைக்குழி

b) தனிநடுகைக் குழி

iii) a) மண்வெட்டி/முள் மண்வெட்டி/வட்டத்தட்டுக் கலப்பை/இறகுக் கலப்பை/யப்பானிய திசை மாற்றும் கலப்பை/நாட்டுக்கலப்பை /மிதிமுள்ளு

b) பயிர்களை நாட்டிய பின்பு நிலத்தில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் அணைத்தும்

04)

i) a) நாற்றுக்களுக்குத் தேவையான சூழல் நிலைமைகளை வழங்க முடியும்/வீரியமான நோயற்ற நாற்றுக்களைப் பெறலாம்/வித்துத் தேவை குறைவு/பராமரிப்பது இலகு/நோயற்ற வீரியமான நாற்றுக்களைப் பெறலாம்/சீரான வளர்ச்சி கொண்ட தாவரங்களைப் பெறலாம்

b) நீர்வசதி/போக்குவரத்து வசதி/எந்நேரமும் அவதானிக்க கூடிய இடம்/போதியளவு சூரிய ஒளி கிடைக்கும் இடம்/நீர் வடிப்புள்ள இடம்/அதிக காற்று வீசாத இடம்/நோய் தாக்கமற்ற இடம்

ii) a) சாடிகளின் அடியில் துளை துளைத்து ஊடகக் கலவையை ஒரளவு ஈரமாக்கி நிரப்புதல்

b) வெற்று தயிர்சட்டி/தேங்காய் சிரட்டை/தேங்காய் உரிமட்டை/வெற்று யோகட் கோப்பை/கடதாசி/வாழைமடல்/பொலித்தீன்

c) விலை அதிகமுள்ள கலப்பின வித்துக்கள் /கோவா/கத்தரி/மிளகாய்/தக்காளி

iii) a) நாற்று மேடையில் காணப்படும் நோய்க்காரணிகள் பூச்சிகள் என்பவற்றை அழித்தல்

b) எரித்தல்/கொதிநீர்/சூரிய ஒளி/இரசாயனப் பதார்த்தம்

05)

i) a) ஒளித்தொகுப்பு/வித்து முளைத்தல்/வித்துப் பரம்பல் /தாவரங்களின் விறைப்புத் தன்மைக்கு/போசனை அகத்துறிஞ்சுவதற்கு/நிலம் பண்படுத்தலுக்கு/களைகட்டுப்பாட்டுக்கு/கிழங்குப் பயிர்களின் அறுவடைக்கு

b) மண்ணீர் காப்பு/நீர்ப்பாசனம்/நீர் வடிப்பு

ii) a) சேதனப்பசளை இடுதல்/மூடுபடையிடுதல்/களைகட்டுப்பாடு/பழமரங்களின் தேவையற்ற கிளைகளை அகற்றுதல்/மண் மேற்பரப்பில் வழிந்தோடும் நீருக்கு தடை ஏற்படுத்தல்

b) தென்னோலை/வைக்கோல்/உலர்புல்/தும்புச்சோறு

iii) பயிரிடப்பட்டுள்ள பயிர்/பயிரின்வளர்ச்சி நிலை/நீர்ப்பாசனத்தின் நோக்கம்/மண்ணீர் வடிப்பு

06)

i) a) அதிக விளைச்சல் கிடைக்கும்/பீடைத் தாக்கம் குறைவு/பாதகமான காலநிலை நிலைமையிலும் பயிரிடலாம்/பருவகாலம் அல்லாத காலங்களிலும் பயிரிடல்/இலை வேர் தண்டுத் துண்டங்களை வேர்விடச் செய்யலாம்/பெறுமதியான தாவரங்களையும் பயிரிடலாம்/இழையவளர்ப்புத் தாவரங்களை புறச் சூழலுக்குப் பழக்கப்படுத்தல்

b) தற்காலிகமான இனப்பெருக்க கட்டமைப்பு

ii) a) தனிச்செடி மறைப்பு/வரிசை மறைப்பு/பாத்தி மறைப்பு/சூரிய இனப்பெருக்கி

b) வலையில்லம்/பொலித்தீன் இல்லம்/கண்ணாடி இல்லம்/பசுமையில்லம்

iii) a) அதிக செலவு/தொழினுட்ப அறிவு தேவை/காற்றினால் கிழிதல்/அல்காக்கள் வளர்தல;/குறித்த காலத்தில் மாற்ற வேண்டிய தேவை ஏற்படுதல்

b) செலவு அதிகம்/தொழனுட்ப அறிவ தேவை

07)

i) a) அலகுப்பரப்பில் அதிக கோழி வளர்க்கலாம்/பயிர்களுக்குப் பாதிப்பில்லை/இரைகௌவிகளினால் பாதிப்பில்லை/பராமரிப்பது இலகு/முட்டை சேகரிப்பது இலகு/நோய் தாக்கம் குறைவு/சேதனப் பசளை /கனகூளத்தில் விற்றமின் B தொகுப்பு

b) ஆரோக்கியம்/35g அதிக நிறை/சீரான வளர்ச்சி/சுறுசுறுப்பு/விகாரமற்றது

c) உமி/வைக்கோல் துண்டுகள்/நிலக்கடலை கோது/மென்மரத்தூள்

ii) a) உணவு உட்கொள்ளாமை/அடிக்கடி கத்துதல்/யோனி சிவந்து வீங்கி காணப்படுதல்/அமைதியற்றுக் காணப்படுதல்/விலங்குகளின் மீது தாவுதல்/அடிக்கடி முதுகை வளைத்து சிறுநீர் கழித்தல்

b) பால் கறக்கும் நிலையிலுள்ள பசு கன்று ஈனுவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு பால் கறத்தலை நிறுத்துதல்

iii) a) கல்சியம் குறைபாடு நோய் அறிகுறி → முன்னங்கால்கள் விறைத்துப் போதல்/மாடு நிலத்தில் படுத்தவாறு காணப்படுதல்/தலையில் நடுக்கம் ஏற்படும்/கழுத்தை திருப்பியவாறு படுத்திருக்கும்

b) தென்னை முக்கோண வலயம்/யாழப்பானக் குடா நாடு/மேல்நாட்டு ஈர வலயம்/இடைநாட்டு வலயம்/தாழ்நாட்டு உலர்வலயம்/தாழ் நாட்டு ஈரவலயம்